# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1925/37 - 2015 ජූලි මස 28 වැනි අඟහරුවාදා - 2015.07.28

*1925/37 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1999.03.11 ஆந் திகதிய 1070/13 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கும், அதற்கு காலத்திற்குக் காலம் கொண்டு வரப்பட்ட திருத்தங்களுக்கும் ஏற்ப எடுக்கப்பட்ட அல்லது இதன் கீழ் எடுக்கப்பட்டதெனக் கருதப்படுகின்ற ஏதேனும் நடவடிக்கையொன்றிற்கு பங்கம் ஏற்படாதவாறு, கீழ்க் காட்டப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ரீ. எம். எல். சீ. சேனாரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2015, யூலை 13.

1. **அமுலுக்கு வரும் திகதி** :
இச்சேவைப் பிரமாணக் குறிப்பு 2015.07.28 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருதல் வேண்டும்.

2. **நியமன அதிகாரி** : அரசாங்க சேவை ஆணைக்குழு

3. **சேவை வகை/வகைகள்**

   3.1 **சேவை வகை** : நிறைவேற்றுத் தரம்
   3.2 **தரங்கள்** : தரம் III
   தரம் II
   தரம் I

4. **ஒப்படைக்கப்படுகின்ற பணிகள் தொடர்பான பொதுவான வரைவிலக்கணம்** : தேசிய கல்விக் கொள்கையுடன் தொடர்புடையதாக பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் தொழிற்பாட்டை முறையாகப் பேணிச் செல்வதற்காக, ஆசிரியர்களுக்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை அடைந்துகொள்ளும் பணிக்காக தாபிக்கப்பட்டுள்ள தேசிய கல்விக் கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள், ஆசிரியர் நிலையங்களின் கற்கைப் பணிகளையும், அதனோடிணைந்த பணிகளையும் நிறைவேற்றுதல் ; அத்துடன், கல்வித் துறையில் மாற்றத்திற்குள்ளாகும் அறிவைப் பெற்றுக்கொள்வதற்காக உயர் கல்வி நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணிச் செல்லல்.

5. **சம்பளம் :**

5.1 **சம்பளக் குறியீட்டு இல.** : SL - I- 2006

5.2 **சம்பள அளவுத் திட்டம்** : 22,935 - 10X645- 8X790- 17X1,050 53,555 ரூபா

5.3 **சேவை வகைக்குரிய தரங்களும், அத் தரங்களுக்குரிய ஆரம்ப சம்பளப் படிநிலைகளும்.**

| தரம் | ஆரம்ப சம்பளப்படிநிலை | ஆரம்ப சம்பள நிலை ரூபா |
|---|---|---|
| III | படிநிலை 1 | 22,935 |
| II | படிநிலை 12 | 30,175 |
| I | படிநிலை 20 | 36,755 |

6. **சேவைக்குரிய பதவிகள் :**

6.1 **அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர், அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை, தரங்கள்**

| | அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | தரம் | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கல்விக் கல்லூரி பீடாதிபதி | I | 18 |
| 2. | கல்விக் கல்லூரி உப பீடாதிபதி | I | 59 |
| 3. | ஆசிரியர் கல்லூரி அதிபர் | I | 8 |
| 4. | சிரேஷ்ட விரிவுரையாளர் | I | 37 |
| 5. | ஒருங்கிணைப்பு விரிவுரையாளர் | I | 60 |
| 6. | ஆசிரியர் கல்லூரி பிரதி அதிபர் | II/ III | 16 |
| 7. | ஆசிரியர் நிலைய முகாமையாளர் | II/ III | 106 |
| 8. | விரிவுரையாளர் | II/ III | 1,785 |
| | மொத்தம் | | 2,089 |

6. 2 **இணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை : 2,089**

தரத்திலிருந்து தரத்திற்கு பதிவியுயர்த்துவதற்கான பணிக்காக தரம் III, II, I அனைத்துத் தரங்களும் இணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைக்கு உரியதாகக் கருதப்படும்.

6.3 **பதவியின்/பதவிகளின் தன்மை** : நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதும் ஆகும்.

7. **ஆட்சேர்ப்பு நடைமுறை :**

7.1 **ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விகிதம்**

| பிரிவு | வீதம் |
|---|---|
| திறந்த | 35% |
| மட்டுப்படுத்தப்பட்ட | 65% |
| திறமை | ஏற்புடையதாகாது |

7.2 **திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் :**

7.2.1 ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற தரம் : இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தரம் III

7.2.2 தகைமைகள் :

7.2.2.1 கல்வித் தகைமைகள் :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் அல்லது பட்டம் அளிக்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் குறித்த பாடத்தில் இரண்டாம் நிலை (உயர்) வகுப்பு சித்தியுடனான பட்டமும், பட்டப் பின் படிப்பு கல்வி டிப்ளோமாவும்

அல்லது

குறித்த பாடத்தில் கல்விமானி இரண்டாம் நிலை (உயர்) வகுப்பு சித்தியுடனான பட்டம் பெற்றிருத்தல்.

7.2.2.2 தொழில்சார் தகைமைகள் : ஏற்புடையதாகாது.

7.2.2.3 அனுபவம் : மேலதிகத் தகைமையாக கருதப்படும்.

7.2.2.4 உளத் தகைமைகள் :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும், போதிய உடல், உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.2.2.5 பிற :

(i) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மூன்று (03) தடவைக்கு மேல் எந்தவொரு நபருக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(iii) தகைமை பெறும் திகதி : சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக்கொள்ளப்படுவது விண்ணப்பதாரி மேலே 7.2.2 தொடக்கம் 7.2.3 வரையிலான பந்திகளில் காட்டப்பட்டுள்ள தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருப்பின் மட்டுமே.

7.2.3 **வயதெல்லை :**

7.2.3.1 ஆகக் குறைந்த வயதெல்லை - 22 வருடங்கள்

7.2.3.2 உச்ச வயதெல்லை - 30 வருடங்கள்

7.2.4 **ஆட்சேர்ப்பு முறை :**

(i) எழுத்து மூலப் பரீட்சையினதும், செயன்முறைப் பரீட்சையுடனான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(ii) இதன் போது பரீட்சார்த்தி எழுத்து மூலப் பரீட்சையில் மூன்று பாடங்களுக்கும் தோற்றி எல்லாப் பாடங்களிலும் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(iii) எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியெய்துவதற்குத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளையும் அதற்குக் கூடிய புள்ளிகளையும் பெற்றுக் கொண்டோருள் இருந்து, வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் இக்கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(iv) எழுத்து மூலப் பரீட்சையிலும், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் விரிவுரை நடாத்தும் செயன்முறைத் திறன் ஆகிய இரண்டிலும் ஆகக் குறைந்த சித்தியெய்துவதற்கான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டோருள் இருந்து, மொத்தப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு, ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட ஒழுங்குமுறைப்படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான விண்ணப்பதாரிகள் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

7.2.4.1 எழுத்துமூலப் பரீட்சை :

| பாடம் | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியெய்துவதற்கான புள்ளிகள் |
|---|---|---|
| பொது அறிவும் உளச் சார்பும் | 100 | 40 |
| கிரகித்தலும் விடய ஆய்வும் | 100 | 40 |
| கல்வி மூலதத்துவங்கள் | 100 | 40 |

(குறிப்பீடு: அட்டவணை IV)

7.2.4.1.1 பரீட்சை நடாத்தும் தகுதிவாய்ந்த அதிகாரி : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

7.2.4.2 தொழில்சார் பரீட்சை : ஏற்புடையதாகாது.

7.2.4.3 பொதுவான நேர்முகப் பரீட்சை: (புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் போதே பொதுவான நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்படும்).

நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் : இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பிலும், ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தலிலும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சித்தல்.

பொதுவான நேர்முகப் பரீட்சைச் சபையை நியமிக்கும் தகுதிவாய்ந்த அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழு.

7.2.4.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :

| **இல.** | **புள்ளி வழங்கப்படுவதற்கான அளவுகோல்** | **ஆகக்கூடிய புள்ளிகள்** | **சித்தியெய்துவதற்கான புள்ளிகள்** |
|---|---|---|---|
| | **பகுதி I** | | ஏற்புடையதாகாது |
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | |
| 2. | ஆசிரியர் தொழிலில் பெற்றுக் கொண்ட அனுபவம் | 15 | |
| 3. | ஆங்கில மொழித் தேர்ச்சி | 10 | |
| 4. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் திறன் | 10 | |
| | **பகுதி II செயன் முறைப்பரீட்சை** | | |
| 1. | விரிவுரை நடாத்துவதற்கான செயன்முறை திறன் | 50 | 20 |

**குறிப்பு :**

(i) மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் பகுதி I இல் காட்டப்பட்டுள்ள புள்ளி வழங்கப்படுகின்ற பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய புள்ளிகளுள், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக விரிவான புள்ளி வழங்கும் நடைமுறையொன்றை அங்கீகரிப்பது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

(ii) விரிவுரை நடாத்துவதற்கான திறனைப் பரீட்சிப்பதற்காக கீழ்க்காட்டப்பட்டவாறு செயன்முறைப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

| | | **புள்ளி வழங்கப்படுவதற்கான அளவுகோல்** | **ஆகக்கூடிய புள்ளிகள்** | **தெரிவு செய்வதற்காக கருத்திற் கொள்ளப்படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகள்** |
|---|---|---|---|---|
| 1. | | விரிவுரை குறிப்புகளை தயார் செய்தல் | 25 | 20 |
| 2. | | சமர்ப்பிப்பு | 25 | |
| | 2.1 | பிரவேசம் | 04 | |
| | 2.2 | விரிவுரை திட்டமிடலின் விடயங்களை சுருக்கமாக சமர்ப்பித்தல் | 04 | |
| | 2.3 | சமர்ப்பிக்கும் விதம் | 08 | |
| | 2.4 | பாட உள்ளடக்கம் | 05 | |
| | 2.5 | நேர முகாமைத்துவம் | 04 | |

7.2.4.4.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையை நியமிக்கும் தகுதிவாய்ந்த அதிகாரி : அரசாங்க சேவை ஆணைக்குழு.

7.2.5 **விண்ணப்பங்கள் கோரப்படும் முறை** : அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலொன்று அரசாங்க வர்த்தமானியிலும், கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் பகிரங்கப்படுத்துவதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.3 **மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு** :

7.3.1 ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற தரம் : இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தரம் III.

7.3.2 தகைமைகள் :

7.3.2.1 கல்வித் தகைமைகள் :

பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் அல்லது பட்டம் அளிக்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் மூலம் குறித்த பாடப்பரப்பில் பட்டமும், பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவும்.

அல்லது

குறித்த பாடப் பரப்பில் கல்விமாணிப் பட்டம் பெற்றிருத்தல்.

**குறிப்பு** : 1- சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் திகதியிலிருந்து 05 வருடங்கள் செல்லும் வரை அட்டவணை VII இல் காட்டப்பட்டுள்ள பாடங்கள் தொடர்பில் அங்கு காட்டப்பட்டுள்ள தகைமைகள் ஆகக் குறைந்த தகைமைகளாக ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், 5 வருட காலப்பகுதியின் இறுதியில் அந்நிலைமை மீளாய்வு செய்யப்படும்.

7.3.2.2 தொழில்சார் தகைமைகள் : ஏற்புடையதாகாது.

7.3.2.3 அனுபவம் :

7.3.2.3.1 மட்டுப்படுத்தப்பட்ட :

விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதிக்கு அல்லது அதற்கு முன் மேலே 7.3.2 இல் காட்டப்பட்ட தகைமைகளை உடைய அரசாங்க அல்லது மாகாண அரச சேவைக்குரிய, இலங்கை அதிபர் சேவையில் அல்லது இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது இலங்கை கல்வி நிர்வாக சேவையில் நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

7.3.2.4 உளத் தகைமைகள் :

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும், பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல், உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.3.2.5 பிற :

(i) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

(ii) இலங்கை கல்வி நிர்வாக சேவையில் அல்லது இலங்கை அதிபர் சேவையில் அல்லது அரச அல்லது மாகாண அரச சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவையில், பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தரொருவராக இருத்தல் வேண்டும்.

(iii) இலங்கை கல்வி நிர்வாக சேவையில் அல்லது இலங்கை அதிபர் சேவையில் அல்லது அரச அல்லது மாகாண அரச சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவையில் பதவியில் கிட்டிய ஐந்து (05) வருட காலப்பகுதியில் எல்லாச் சம்பள ஏற்றங்களையும் உரிய திகதிக்கு பெற்றிருக்க வேண்டுமென்பதுடன், இக் காலப்பகுதியில் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்படாதிருத்தலும் வேண்டும்.

(iv) மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மூன்று (03) தடவைக்கு மேல் எந்தவொரு நபருக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(v) தகைமை பெறும் திகதி : சேவைக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக் கொள்ளப்படுவது, விண்ணப்பதாரி மேலே 7.3.2 தொடக்கம் 7.3.3 வரையிலான பந்திகளில் காட்டப்பட்டுள்ள தேவையான தகைமைகளை, விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருப்பின் மட்டுமே.

7.3.3 வயதெல்லை :

7.3.3.1 ஆகக் குறைந்த வயதெல்லை - ஏற்புடையதாகாது.

7.3.3.2 உச்ச வயதெல்லை - 45 வருடங்கள்.

7.3.4 ஆட்சேர்ப்பு முறை :

(i) எழுத்துமூலப் பரீட்சையினதும், செயன்முறைப் பரீட்சையுடனான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

(ii) இதன் போது பரீட்சார்த்தி எழுத்துமூலப் பரீட்சையில் மூன்று பாடங்களுக்கும் தோற்றி எல்லாப் பாடங்களிலும் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

(iii) எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியெய்துவதற்குத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகளையும் அதற்குக் கூடிய புள்ளிகளையும் பெற்றுக்கொண்டோருள் இருந்து, வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் இக்கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

(iv) எழுத்துமூலப் பரீட்சையிலும், கட்டமைக்கப்பட்ட பரீட்சையிலும் விரிவுரை நடாத்தும் செயன்முறைத் திறன் ஆகிய இரண்டிலும் ஆகக்குறைந்த சித்தியெய்துவதற்கான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டோருள் இருந்து மொத்தப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு, ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட ஒழுங்குமுறைப்படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமான விண்ணப்பதாரிகள் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

7.3.4.1 எழுத்துமூலப் பரீட்சை :

| **பாடம்** | **ஆகக்கூடிய புள்ளிகள்** | **சித்தியெய்துவதற்கான புள்ளிகள்** |
|---|---|---|
| பொது அறிவும் உளச் சார்பும் | 100 | 40 |
| கிரகித்தலும் விடய ஆய்வும் | 100 | 40 |
| கல்வி மூலதத்துவங்கள் | 100 | 40 |

குறிப்பீடு : அட்டவணை IV)

7.3.4.1.1 பரீட்சை நடாத்தும் தகுதிவாய்ந்த அதிகாரி : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

7.3.4.2 தொழில்சார் பரீட்சை : ஏற்புடையதாகாது.

7.3.4.3 பொதுவான நேர்முகப் பரீட்சை : புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் போதே பொதுவான நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்படும்.

நிறைவேற்றிக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்கள் : இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பிலும், ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தலிலும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தும் எல்லாவிதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சித்தல்.

பொதுவான நேர்முகப் பரீட்சைச் சபையை நியமிக்கும் தகுதிவாய்ந்த அதிகாரி அரசாங்க சேவை ஆணைக்குழு.

7.3.4.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

| | **புள்ளி வழங்கப்படுவதற்கான அளவுகோல்** | **ஆகக்கூடிய புள்ளிகள்** | **சித்தியெய்துவதற்கான புள்ளிகள்** |
|---|---|---|---|
| | **பகுதி I** | | ஏற்புடையதாகாது |
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | |
| 2. | ஆங்கில மொழித் தேர்ச்சி | 15 | |
| 3. | தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்திறன் | 15 | |
| | **பகுதி II செயன்முறைப் பரீட்சை** | | |
| 1. | விரிவுரை நடாத்துவதற்கான செயன்முறைத் திறன் | 50 | 20 |

குறிப்பு :

(i) மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் பகுதி I இல் காட்டப்பட்டுள்ள புள்ளி வழங்கப்படுகின்ற பிரதான துறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய புள்ளிகளுள், கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக விரிவான புள்ளி வழங்கும் நடைமுறையொன்றை அங்கீகரிப்பது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் ;

(ii) விரிவுரை நடாத்துவதற்கான திறனைப் பரீட்சிப்பதற்காக கீழ்க் காட்டப்பட்டவாறு செயன்முறைப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

| | | புள்ளி வழங்கப்படுவதற்கான அளவுகோல் | ஆகக்கூடிய புள்ளிகள் | தெரிவு செய்வதற்காக கருத்திற் கொள்ளப்படுகின்ற ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. | | விரிவுரை குறிப்புகளை தயார் செய்தல் | 25 | 20 |
| 2. | | சமர்ப்பிப்பு | 25 | |
| | 2.1 | பிரவேசம் | 04 | |
| | 2.2 | விரிவுரை திட்டமிடலின் விடயங்களை சுருக்கமாக சமர்ப்பித்தல் | 04 | |
| | 2.3 | சமர்ப்பிக்கும் விதம் | 08 | |
| | 2.4 | பாட உள்ளடக்கம் | 05 | |
| | 2.5 | நேர முகாமைத்துவம் | 04 | |

7.3.4.4.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையை நியமிக்கும் தகுதிவாய்ந்த அதிகாரி: அரசாங்க சேவை ஆணைக்குழு.

7.3.5 விண்ணப்பங்கள் கோரப்படும் முறை : அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல் மூலம் அல்லது உள்வாரியாக பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தல் மூலம் அல்லது கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படுகின்ற அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும்.

7.4 **திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்** : ஏற்புடையதாகாது.

**8. வினைத்திறன்காண் தடைப் பரீட்சை**

8.1

| வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பெயர் | எத்தனை வருடங்களுக்குள் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டும் என்பது | வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் தன்மை எழுத்துமூல/தொழில்சார்/ சான்றிதழ் பாடநெறி/பிற |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | இலங்கை ஆசியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருடங்கள் கடப்பதற்கு முன் | குறிப்பீடு : அட்டவணை III |
| 2 ஆவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் II இற்குப் பதவி உயர்த்தப்பட்டு மூன்று (03) வருடங்கள் கடப்பதற்கு முன் | குறிப்பீடு : அட்டவணை III |
| 3 ஆவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I இற்குப் பதவி உயர்த்தப்பட்டு ஐந்து (05) வருடங்கள் கடப்பதற்கு முன் | குறிப்பீடு : அட்டவணை III |

**குறிப்பு** : இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் 1999.03.11 ஆந் திகதிய 1070/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு 3 இற்குரிய 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்திய உத்தியோகத்தர்கள், இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் 2 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களாகவும், வகுப்பு 2 தரம் II இற்குரிய வினைத்திறன் காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்திய உத்தியோகத்தர்கள், இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களாகவும் (ஆங்கிலப் பாடம் தவிர) ஏற்றுக்கொள்ளப்படுவர்.

**8.2 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை எவ்வெப்போது நடாத்தப்படுமென்பது** : வருடத்திற்கு இரு தடவைகள் நடாத்தப்படும்.

**8.3 வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்குரிய பரீட்சைகளை நடாத்தும் அதிகாரி** :

1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்
2 ஆவது வினைத்திற்ன்காண் தடைப் பரீட்சை : கல்வி அமைச்சின் செயலாளர்.

**9. மொழித் தேர்ச்சி** :

**9.1**

| | மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி |
|---|---|---|
| 1. | அரசகரும மொழி | அரசகரும மொழி அல்லாத மொழியொன்றின் மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் 03 வருடங்களுக்குள் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். |
| 2. | மற்றைய அரசகரும மொழி | ஒவ்வொரு உத்தியோகத்தரும் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு ஐந்து (05) வருடங்களுக்குள் 01/2014 ஆம் இலக்கப் பொது நிர்வாக சுற்றறிக்கையினதும் அதனோடிணைந்த சுற்றறிக்கைகளினதும் பிரகாரம் மற்றைய அரசகரும மொழியில் உரிய மட்டத்திற்குரிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 3. | இணைப்பு மொழி | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவர், அவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் இணைப்பு மொழியான ஆங்கில மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். உத்தியோகத்த ரொருவர் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தியை அல்லது அதிலும் உயர் சித்தியைப் பெற்றிருப்பின் இணைப்பு மொழிப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவார். ஏனைய உத்தியோகத்தர்கள் அட்டவணை VIII இல் காட்டப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும். ஆங்கில மொழி மூலம் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் இத்தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர். |

**9. 2 இணைப்பு மொழிப் பரீட்சை எவ்வெப்போது நடாத்தப்படுமென்பது** : வருடத்திற்கு ஒரு தடவை நடாத்தப்படும்.

**9. 3 இப்பரீட்சையை நடாத்தும் அதிகாரி** : பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

**10. தரங்களுக்குப் பதவியுயர்த்தல்** :

**10.1 தரம் III இலிருந்து தரம் II இற்கு பதவியுயர்த்தல்** :

10.1.1 பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள் :

(i) பதவி நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
(ii) பதவியுயர்வு பெறத் தகைமை பெறுகின்ற திகதியில் சேவை வகைக்குரிய தரம் III இல் குறைந்த பட்சம் பத்து (10) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும், பத்து (10) சம்பள ஏற்றங்களையும் ஈட்டியிருத்தலும்.
(iii) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை தரக் கணிப்பீட்டு நடவடிக்கை முறையின பிரகாரம் பதிவியுயர்வுத் திகதிக்கு முன்னரான பத்து (10) வருடங்களுக்குள் திருப்திகரமான அல்லது உயர் செயலாற்றுகையைக் காட்டியிருத்தல்.
(iv) பதவியுயர்வுத் திகதிக்கு அண்மித்த ஐந்து (05) வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
(v) உரிய திகதியன்று 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல்.
(vi) அடுத்த அரசகரும மொழியில் உரிய மட்டத்திலான தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.

(vii) இணைப்பு மொழியில் (ஆங்கிலம்) தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.
(viii) திறன் விருத்தி பாடநெறி 01 இல் சித்தியெய்தியிருத்தல் (அட்டவணை XI)

10.1.2 பதவியுயர்த்தல் முறை :

உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் உத்தியோகத்தர்களினால் உரிய படிவத்தின் மூலம் நியமன அதிகாரிக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின், நியமன அதிகாரியினால் தகைமைகளைப் பரீட்சித்ததன் பின், தகைமைபெறும் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு தரம் II இற்கு நியமன அதிகாரியினால் தரமுயர்த்தப்படுவர். விண்ணப்பிக்க வேண்டிய படிவம் அட்டவணை IX இல் காட்டப்பட்டுள்ளது.

**10.2 தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவியுயர்த்தல் :**

10.2.1 பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டம் அளிப்பதற்கான நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து அல்லது தேசிய கல்வி நிறுவகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வி தொடர்பான அல்லது உரிய துறையில் பட்டப்பின் படிப்புப் பட்டம் பெற்றிருத்தல்.
(ii) பதவியுயர்வு பெறத் தகைமை பெறுகின்ற திகதியில் சேவை வகைக்குரிய தரம் II இல் குறைந்த பட்சம் ஏழு (07) வருட தொடர்ச்சியானதும், திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும்,ஏழு (07) சம்பள ஏற்றங்களையும் ஈட்டியிருத்தலும்.
(iii) பதவியுயர்வுத் திகதிக்கு கிட்டிய ஐந்து (05) வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
(iv) அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடவடிக்கை முறையின் பிரகாரம் பதவியுயர்வுத் திகதிக்கு முன்னரான ஏழு (07) வருடங்களிலும் திருப்திகரமான அல்லது உயர் செயலாற்றுகையைக் காட்டியிருத்தல்.
(v) உரிய திகதியன்று 2 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல்.
(vi) திறன் விருத்தி பாடநெறி 02 இல் சித்தியெய்தியிருத்தல் (அட்டவணை XII).

10.2.2 பதவியுயர்த்தல் முறை :

உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்கும் உத்தியோகத்தர்களினால் உரிய படிவத்தின் மூலம் நியமன அதிகாரிக்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்ததன் பின், நியமன அதிகாரியினால் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சித்து, தகைமை பெறும் திகதியிலிருந்து அமுலுக்கு வருமாறு தரம் I இற்கு நியமன அதிகாரியினால் பதவியுயர்த்தப்படுவர். விண்ணப்பிக்க வேண்டிய படிவம் அட்டவணை X இல் காட்டப்பட்டுள்ளது.

**குறிப்பு** : பதவியுயர்த்தும் போது உரிய திகதிக்கு வினைத்திறன்காண்தடைப் பரீட்சையில் சித்தியெய்தாத உத்தியோகத்தர்களின் பதவியுயர்வுத் திகதியை, வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்துவதற்குத் தாமதமாகிய காலப்பகுதிக்குச் சமமான காலத்தினால் பிற்போடுதல் வேண்டும்.

**11. பதவிகளுக்கு நியமித்தல் :**

**11.1 தகைமைகள் :**

| பதவி | தகைமைகள் |
|---|---|
| 1. கல்விக் கல்லூரி பீடாதிபதி | 3 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்திய தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். |
| 2. ஆசிரியர் கல்லூரி அதிபர் | 3 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்திய தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். |

| பதவி | தகைமைகள் |
|---|---|
| 3. கல்விக் கல்லூரி உப பீடாதிபதி | 3 ஆவது வினைத்திறன் காண்தடைப் பரீட்சையில் சித்தியெய்திய தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். |
| 4. சிரேஷ்ட விரிவுரையாளர் | தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். |
| 5. ஒருங்கிணைப்பு விரிவுரையாளர் | தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். |
| 6. ஆசிரியர் கல்லூரி பிரதி அதிபர் | தரம் II/III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். |
| 7. ஆசிரியர் நிலைய முகாமை யாளர் | தரம் II/III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். |
| 8. விரிவுரையாளர் | தரம் II/III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள். |

**11.2 தெரிவு செய்யும் முறை :**

11.2.1 சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை 11.1 இல் 4, 5, 6, 7 இலக்கங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்கு, உரிய தரத்தின் சேவை மூப்பின் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவர்.

11.2.2 சேவைப் பிரமாணக்குகுறிப்பின் அட்டவணை 11.1 இல் 1, 2, 3 இலங்கங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள பதவிகளுக்கு, தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர். (புள்ளி வழங்கும் நடைமுறை அட்டவணை V).

**12 சேவை நிபந்தனைகள் :**

**12.1 சேவையில் நிரந்தரமாக்குவதற்கான நிபந்தனைகள் :**

12.1.1 சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற புதிய உத்தியோகத்தர்கள் அமைச்சின் செயலாளரினால் விதிக்கப்படுகின்ற நிறுவனமொன்றில் ஆட்சேர்ப்பின் போது வழங்கப்படுகின்ற கட்டாய திசைமுக சேவைமுன் பயிற்சிக்கு உட்படுதல் வேண்டும்.

இப்பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்குத் தவறும் உத்தியோகத்தர்கள், அவர்கள் அரச சேவையில் முன்பு வகித்த பதவிகளுக்கு திருப்பி அனுப்பப்படவோ அல்லது அவர்களது சேவை முடிவுறுத்தப்படவோ முடியும்.

12.1.2 மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரும் மேலே 12.1.1 உப பந்தியில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் தாபனவிதிக் கோவையினதும் அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கை முறையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு, ஒருவருட பதில் கடமை காலப்பகுதியின் பின் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

12.1.3 திறந்த அடிப்படையில் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரும் மேலே 12.1.1 உப பந்தியில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும், தாபனவிதிக் கோவையினதும் அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கை முறையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட்டு மூன்று (03) வருட தகுதிகாண் காலப்பகுதியின் பின் சேவையில் நிரந்தரமாக்கப்படுவர்.

**12.2 பயிற்சியும் அபிவிருத்தியும் :**

12.2.1 திசைமுக சேவைமுன் பயிற்சி

12.2.1.1 திறந்த : திசைமுக சேவைமுன் பயிற்சிக் காலம் 06 மாதங்களாகும். பயிற்சிக் காலப்பகுதியில் கல்வித் துறையுடன் தொடர்புடைய திட்ட அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன், பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்துதலும் வேண்டும்.

12.2.1.2 மட்டுப்படுத்தப்பட்ட: திசைமுக சேவைமுன் பயிற்சிக் காலம் 01 மாதமாகும். பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

12.2.2 சேவையைச் சேர்ந்த ஒவ்வொரு உத்தியோகத்தரும், கல்விக் கல்லூரிச் சபைக்கு ஏற்றுக்கொள்ள முடியுமான குறித்த பாடப் பரப்புடன் தொடர்புடைய திட்ட அறிக்கையொன்றை ஏதேனுமொரு பாடசாலையை அல்லது உயர் கல்வி நிறுவனமொன்றை மையமாகக் கொண்டு பூர்த்தி செய்வதற்கு பணிக்கப்படுவர்.

12.2.3 விண்ணப்பதாரிகளின் தகைமை, குறித்த நிகழ்ச்சித் திட்டங்களின் தேவை, கல்விக் கல்லூரிச் சபையின் சிபாரிசுகளின் அடிப்படையில் ஆசிரியர் கல்வியியலாளர்களுக்கு தொழில் ரீதியில் தகைமைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு முறையான தெரிவு செய்யும் தொழிற்பாட்டிற்குக் கட்டுப்பட்டு புலமைப் பரிசில்/ இணைத்தல்/கல்விச் சுற்றுலா முதலானவற்றை சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வழங்க முடியும்.

12.2.4 இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் உள்ளடக்கத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறு, தேவையான தேர்ச்சிகளையும், நிபுணத்துவத்தையும் எல்லா உத்தியோகத்தர்களும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

12.2.5 திறன் விருத்திப் பாடநெறிகள்

12.2.5.1 திறன் விருத்திப் பாடநெறி - 1

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக, கல்விச் செயலாளரினால் பெயர் குறிக்கப்படுகின்ற பயிற்சி நிறுவனமொன்றினூடாக நடாத்தப்படுகின்ற அட்டவணை XI இல் காட்டப்பட்டுள்ள 06 வாரகால திறன் விருத்திப் பாடநெறியில், சேவையில் இணைந்து பத்து (10) வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன் சித்தியெய்துதல் வேண்டும்.

12.2.5.2 திறன் விருத்திப் பாடநெறி - 2

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்காக, கல்விச் செயலாளரினால் பெயர் குறிக்கப்படுகின்ற பயிற்சி நிறுவனமொன்றினூடாக நடாத்தப்படுகின்ற அட்டவணை XII இல் காட்டப்பட்டுள்ள 04 வாரகால திறன் விருத்திப் பாடநெறியில், தரம் II இற்கு பதவியுயர்வு பெற்றதன் பின் மட்டும் ஏழு (07) வருடங்களுக்குள் சித்தியெய்துதல் வேண்டும்.

12.3 **பிற நிபந்தனைகள் :**

12.3.1 ஒவ்வொரு நியமனம் தொடர்பிலும் தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகளில் காட்டப்பட்டுள்ள பொது நிபந்தனைகளும் பொருந்தும்.

12.3.2 இச்சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள ஏற்பாடுகள் 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, கல்விக் கல்லூரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மேலாக அல்லது மீறப்படும் விதத்தில் அமுல் செய்யப்படுதல் கூடாது.

12.3.3 சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை I இல் காட்டப்பட்டுள்ள பதவிகளை வகிக்க முடியும் என்பதுடன், அவர்கள் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுதல் வேண்டும்.

12.3.4 சேவையின் தரம் III இற்கு ஆட்சேரப்புச் செய்யும் போது, எந்தவொரு வருடத்திலும் குறித்த துறையில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யூன் 30 ஆந் திகதிக்கு காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆகும்.

**13. பொருள்கோடலும், வரைவிலக்கணமும்,**

13.1 "பிரமாணக் குறிப்பு" எனும் பதம் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பு எனப் பொருள்படும்.

13.2 "சேவை" எனும் பதம் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை எனப் பொருள்படும்.

13.3 "ஆணைக்குழு" எனும் பதம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க சேவை ஆணைக்குழு எனப் பொருள்படும்.

13.4 "அமைச்சு" எனும் பதம் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நேர்வரிசை அமைச்சு எனப் பொருள்படும்.

13.5 “செயலாளர்” எனும் பதம் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான நேர்வரிசை அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்.

13.6 “தேசிய கல்வி நிறுவகம்” எனும் பதம் 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின் கீழ் நிறுவப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் எனப் பொருள்படும்.

13.7 “தேசிய கல்விக் கல்லூரி” எனும் பதம் 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட முன் சேவை ஆசிரியர் பயிற்சி நிறுவகம் எனப் பொருள்படும்.

13.8 “தேசிய கல்விக் கல்லூரிகள் சபை” எனும் பதம் 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்விக் கல்லூரிகள் சட்டத்தின் கீழ் பொருள் கோடப்பட்ட கல்விக் கல்லூரிகள் சபை எனப் பொருள்படும்.

13.9 “ஆசிரியர் கல்லூரிகள்” எனும் பதம் ஆசிரியர் பயிற்சிக்காகத் தாபிக்கப்பட்ட ஆசிரியர் கல்லூரிகள் எனப் பொருள்படும்.

13.10 ‘‘ஆசிரியர் நிலையங்கள்’’ எனும் பதம் ஆசிரியர்களுக்கான வள நிலையங்களாகச் செயற்படக்கூடிய தொடர்ச்சியான கல்வி நிகழ்ச்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்காகத் தாபிக்கப்பட்ட வதிவிடம் அல்லாத நிறுவனங்கள் எனப் பொருள்படும்.

13.11 “உரிய பாடப் பரப்பு” எனும் பதம் இச்சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை II இல் அல்லது அதிலுள்ள குறிப்பீடுகளின் பிரகாரம் ஆட்சேர்ப்பிற்காகப் பிரசுரிக்கப்படுகின்ற வர்த்தமானி அறிவித்தலில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் பாடப் பரப்புகளில் ஒன்று எனப் பொருள்படும்.

13.12 ‘‘தொடர்ச்சியான சேவைக் காலம்’’ எனும் பதம் தனது பதவிக்குரிய சம்பளத்தைப் பெற்ற வண்ணம் உண்மையிலேயே கடமையில் ஈடுபட்டிருந்த காலம் எனப் பொருள்படும். அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மகப்பேற்று விடுமுறை தவிர்ந்த பிற எல்லா சம்பளமற்ற விடுமுறை காலப்பகுதிகள் தொடர்ச்சியான சேவைக் காலத்திற்காக கணக்கில் கொள்ளப்பட மாட்டாது.

13.13 ‘‘அமுலுக்கு வரும் திகதி’’ எனும் பதம் இச்சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் திகதி எனப் பொருள்படும்.

**14. தரங்களுக்கு அமைவாக உள்ளீர்த்தல்.**

உள்ளீர்த்தல் காரணமாக குறித்த உத்தியோகத்தரின் சம்பளத்தில் அல்லது சம்பள ஏற்றத் திகதியில் மாற்றம் ஏற்படலாகாது என்பதுடன், அத்திகதியானது உள்ளீர்ப்பிற்கு முன் காணப்பட்ட சம்பள ஏற்றத் திகதியாக தொடர்ந்தும் மாறாது இருத்தல் வேண்டும். அதே போன்று சம்பள மாற்றத்தின் போது குறித்த உத்தியோகத்தர் இறுதியாகப் பெற்றுவந்த சம்பளப் படிநிலை, புதிய சம்பளப்படி நிலையை நேரொத்ததாக இருத்தல் காரணமாக, தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் VII பந்தி 4.4 இன் பிரகாரம் அடுத்தபடியாகவுள்ள மேல் சம்பளப்படி நிலையில் வைத்தல் கூடாது.

**14.1 தரம் I இற்கு உள்ளீர்த்தல்**

அமுலுக்கு வரும் திகதிக்கு பழைய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் தரம் I இற்கு உள்ளீர்க்கப்படுவர்.

**14.2 தரம் II இற்கு உள்ளீர்த்தல்**

அமுலுக்கு வரும் திகதிக்கு பழைய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு 2- I, 2- II, ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் தரம் II இற்கு உள்ளீர்க்கப்படுவர்.

**14.3 தரம் III இற்கு உள்ளீர்த்தல்**

அமுலுக்கு வரும் திகதிக்கு பழைய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு 3 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் தரம் III இற்கு உள்ளீர்க்கப்படுவர்.

**15. இடைக்கால ஏற்பாடுகள் :**

இச்சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் திகதியிலிருந்து இரண்டு (02) வருட காலம் வரை இடைக்கால ஏற்பாடுகள் அமுலில் இருக்கும்.

**15.1 இடைக் காலப்பகுதியில் தரம் III இலிருந்து தரம் II இற்கு பதவியுயர்த்தல்.**

* குறிப்பு 8.1 ஏற்புடையதாகும்.
* க.பொ.த (சா.த) பரீட்சையில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருப்பின் அல்லது ஆங்கில மொழி மூலத்தில் பட்டப்படிப்பை/பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவை/பட்டப்பின் படிப்புப் பட்டத்தைப் பெற்றிருப்பின் இணைப்பு மொழித் (ஆங்கிலம்) தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்.
* திறன் விருத்திப் பாடநெறி 01 இல் சித்தியெய்த வேண்டிய தேவையிலிருந்தும் விலக்களிக்கப்படுவர்.

**15.2 இடைக்காலப்பகுதியில் தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவியுயர்த்தல்.**

* குறிப்பு 8.1 ஏற்புடையதாகும்.
* திறன் விருத்திப் பாடநெறி 1 மற்றும் 2 இல் சித்தியெய்த வேண்டிய தேவையிலிருந்தும் விலக்களிக்கப்படுவர்.

16. இச் சேவைப் பிரமாணக் குறிப்பின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டில்லாத ஏதேனும் விடயம்/விடயங்கள் இருப்பின், அது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளரின் சிபாரிசுகளுக்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்படும்.

17. இச்சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் திகதிக்கு சேவையில் ஈடுபட்டுள்ள விருப்புத் தெரிவிற்குரிய ஓய்வுபெறுவதற்கான வயதை அடைந்தில்லாத உத்தியோகத்தரொருவருக்கு, அவரால் செய்யப்படுகின்ற கோரிக்கைக்கு அமைய ஓய்வூதியப் பிரமாணக் கோவையின் 7 ஆம் பிரிவின் கீழ் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான விருப்பத்தைத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறான சலுகையொன்றைப் பெற்றுக்கொடுக்குமளவிற்கு இச் சேவைப் பிரமாணக் குறிப்பிலுள்ள ஏற்பாடுகளினால் மோசமான பாதிப்பொன்று அவ் உத்தியோகத்தருக்கு ஏற்பட்டுள்ளதென அரசாங்க சேவை ஆணைக்குழு திருப்தி கொள்ளுமாயின், இச் சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்குள் அவருக்கு அவ்விருப்பத்தைத் தெரிவிக்க முடியும்.

## அட்டவணை I

**பதவிகள் தொடர்பான பட்டியல்**

தரம் : I
கல்விக் கல்லூரி பீடாதிபதி
கல்விக் கல்லூரி உப பீடாதிபதி
ஆசிரியர் கல்லூரி அதிபர்
சிரேஷ்ட விரிவுரையாளர்
ஒருங்கிணைப்பு விரிவுரையாளர்.

தரம் : II/ III
ஆசிரியர் கல்லூரி பிரதி அதிபர்
ஆசிரியர் நிலைய முகாமையாளர்
விரிவுரையாளர்.

## அட்டவணை II

பாடப்பரப்புப் பட்டியல் - (பாடங்கள்)

(கல்வி அமைச்சின் தேவைக்கேற்றவாறு காலத்திற்குக் காலம் திருத்தப்பட முடியும்)

1. **தொழில்சார் பாடங்கள் :**

(i) கல்வி மூலதத்துவங்கள்
(ii) பாடசாலை ஒழுங்கமைப்பும், வகுப்பறை முகாமையும்
(iii) கல்வி வழிகாட்டல்
(iv) கல்வி உளவியல்
(v) கல்விச் சமூகவியல்
(vi) கற்பித்தல் முறைகள்
(vii) மதிப்பீடும், அளவிடும்.

*அட்டவணை II* (தொடர்ச்சி)

2. சிங்கள மொழி (தாய் மொழி)
3. சிங்கள மொழி (இரண்டாம் மொழி)
4. தமிழ் மொழி (தாய்மொழி)
5. தமிழ் மொழி (இரண்டாம் மொழி)
6. ஆங்கிலம்
7. சுகாதாரமும், உடற் கல்வியும்
8. நடனம்
9. நடனம் (பரதம்)
10. சங்கீதம்
11. சங்கீதம் (கர்நாடகம்)
12. மேலைத்தேய சங்கீதம்
13. சித்திரம்
14. நாடகமும், அரங்கியலும்
15. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்
16. ஆரம்பக் கல்வி

(i) தாய்மொழி
(ii) அழகியற் கல்வி
(iii) உடற் கல்வி
(iv) சிறப்புக் கல்வி
(v) படைப்பாற்றல் திறன்
(vi) ஆங்கிலம்
(vii) ஆரம்ப விஞ்ஞானம்
(viii) ஆரம்ப கணிதம்

17. பௌத்த சமயம்
18. கத்தோலிக்க சமயம்/கிறிஸ்தவ சமயம்
19. இந்து சமயம்
20. இஸ்லாம்
21. கணிதம்
22. உயிரியல்
23. இரசாயனவியல்
24. பௌதீகவியல்
25. இயந்திரவியல் தொழில்நுட்பம்
26. நிர்மாணத்துறைத் தொழில்நுட்பம்
27. மின்சார, இலத்திரனியல் தொழில்நுட்பம்
28. நுண்கலை (மட் பாண்டமும் கைப்பணிக் கைத்தொழிலும்)
29. நெசவுக் கைத்தொழில் தொழில்நுட்பம்
30. குடியுரிமைக் கல்வி
31. வரலாறு
32. பூகோளவியல்
33. நூலகமும், தகவல் கல்வியும்
34. விவசாய விஞ்ஞானம்
35. விசேட கல்வி
36. மனைப் பொருளியல்
37. பிரெஞ்சு மொழி
38. தொழில் முயற்சிக் கல்வி
39. முகாமைத்துவக் கல்வி

*அட்டவணை III*

***வினைத்திறன்காண் தடை***

***(1) 1 ஆவது வினைத்திறன்காண் தடை***

